# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:-130** **தேதி:-08.04.2019**

## தமிழ் மாநில மையக் கூட்ட முடிவுகள்

அன்பார்ந்த தோழர்களே,

தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கத்தின் மையக் கூட்டம் 08.04.2019 அன்று பழவந்தாங்கலில் உள்ள மாநில சங்க அலுவலகத்தில் தமிழ் மாநில தலைவரும், அகில இந்திய உதவி பொதுச்செயலாளருமான தோழர் S.செல்லப்பா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் தோழர் S.செல்லப்பா CP, தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன் CS, தோழர் K.சீனிவாசன் CT, தோழர் P.இந்திரா ACS, தோழர் T.பிரேமா CVP, தோழர் K.V.சிவகுமரன் CVP மற்றும் தோழர் பெர்லின் ஆலிஸ் மேரி BSNL WWCC ஆகியோர் பங்கேற்றனர்.

அருமை தோழர் M.முருகையா அவர்களின் மறைவிற்கு ஒரு நிமிட அஞ்சலி செலுத்திய பின் 06,07-04-2019 ஆகிய தேதிகளில் நடைபெற்ற மத்திய செயற்குழுவின் முடிவுகளை மாநில செயலாளர் தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன் விளக்கி பேசினார். அத்துடன் புதுடெல்லியில் 05.04.2019 அன்று நடைபெற்ற 'சஞ்சார் பவன் நோக்கிய பேரணி'யில் தமிழகத்தில் நமது சங்கத்தின் சார்பில் 107 தோழர்கள் கலந்துக் கொண்டதையும் பாராட்டி பேசினார். BSNL WWCC அகில இந்திய அமைப்பாளர் தோழர் P.இந்திரா அவர்கள் அகில இந்திய கமிட்டியின் முடிவுகளை விளக்க உரை நிகழ்த்தினார்

பின்னர் அனைத்து தோழர்களின் விவாதத்திற்கு பின் கீழ்கண்ட முடிவுகள் ஏகமனதாக எடுக்கப்பட்டன.

1) மத்திய ஆட்சியாளர்களின் BSNL விரோத, ஜியோ ஆதரவு கொள்கைகளுக்கு எதிராக 'SAVE BSNL- SAVE NATION' என்கிற கோஷத்தை முன் வைத்து ஜாலியான் வாலா பாக் தியாகிகளின் நினைவு நாளான 13.04.2019 முதல் 30.04.2019 வரை நாடு முழுவதும் தெருமுனை பிரச்சாரங்களை நடத்த வேண்டும். தமிழகத்தில் தேர்தல் 18.04.2019 அன்று நடைபெ|றுவதை ஒட்டி நமது மாநிலத்தில் அனைத்து மாவட்டங்களிலும் 13.04.2019 முதல் 16.04.2019 வரை நடத்திட வேண்டும்.

2) பாரத பிரதமர் மோடி அவர்கள் ஜூன் மாதம் வரை ஊதியம் கண்டிப்பாக கொடுக்க வேண்டும் என கூறியிருப்பதன் மூலம் ஜூலை மாத ஊதியம் என்பது கேள்விக்குறியாகி உள்ளது. இது அரசின் திட்டமிட்ட சதி என்பதால் இதனை விளக்கி 2019 ஜூன் 01 முதல் 15 வரை அனைத்து மாவட்டங்களிலும் சிறப்புப் பொதுக்குழுக் கூட்டங்களை நடத்த வேண்டும்.

3) ஏப்ரல்-14 டாக்டர் பாபா சாகேப் அம்பேத்கார் அவர்களின் பிறந்த நாளை பொருத்தமான முறையில் நாடு முழுவதும் சிறப்பாக கொண்டாட வேண்டும்.

4) மாவட்ட சங்கங்கள் தங்கள் மாவட்டத்தில் உள்ள மொத்த ஊழியர்கள் மற்றும் சங்க வாரியான ஊழியர்கள் எண்ணிக்கை மற்றும் விவரங்களை மாநில சங்கத்திற்கு 20.04.2019க்குள் அனுப்பி வைக்க வேண்டும்.

5) BSNL WWCCயின் அகில இந்திய கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை தமிழகத்தில் அமலாக்க அனைத்து மாவட்டங்களிலும் BSNL WWCC கூட்டங்கள் நடைபெற வேண்டும். குறிப்பாக கோவை, மதுரை, திருச்சி மற்றும் நாகர்கோவில் உள்ளிட்ட மாவட்டங்களில் விரைவில் நடத்திட மாவட்ட சங்கங்கள் முயற்சி மேற்கொள்ள வேண்டும். அதில் பங்கேற்க உள்ள மாநில BSNL WWCC கமிட்டி உறுப்பினர்களை மாநில அமைப்பாளரிடம் தொடர்பு கொண்டு இறுதி செய்ய வேண்டும்.

6) ஏப்ரல் 13 முதல் நடைபெற உள்ள தெருமுனை பிரச்சாரக் கூட்டங்களுக்கு தேவையான குறிப்பினை மத்திய சங்கத்திடம் இருந்து வந்தவுடன் தமிழாக்கம் செய்யப்பட்டு நமது இணைய தளத்தில் வெளியிடப்படும்.

7) தமிழ் மாநில சங்கத்திற்கு மாவட்டங்களில் இருந்து அனுப்ப வேண்டிய நிதியினை உடனடியாக மாவட்ட சங்கங்கள் அனுப்பி வைக்க வேண்டும்.

மத்திய செயற்குழுவின் முடிவுகளையும், மாநில மையக் கூட்டத்தின் முடிவுகளையும் அனைத்து மாவட்ட சங்கங்களும் வெற்றிகரமாக்கிட வேண்டுகிறோம்.

**வாழ்த்துக்களுடன்**,

**தோழமையுள்ள,**



(A.**பாபு ராதாகிருஷ்ணன்**)
**மாநில செயலாளர்**